**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் புதன்கிழமை</u>**
**<u>IA. 03/2024 in O.S.86/2017</u>**

ஜெயராமன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. இராமலிங்கம்
2. கிருஷ்ணமூர்த்தி
3. அய்யம்பெருமாள்
4. கருப்பையன்
5. வட்டார வளர்ச்சி அலுவலர், ஆண்டிமடம்,
6. கிராம நிர்வாக அலுவலர், குவாகம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 10.08.2024–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பழனிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 வரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சேட்டுராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 5,6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளதால் இம்மனுவிலும் தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக வாதி தரப்பு சாட்சியை விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்தினை 03.02.2024 முடிக்கப்பட்டதாக போடப்பட்டுள்ள வழக்கினை இரத்து செய்து மீண்டும் Reopen செய்ய உத்தரவாக வேண்டி சி.பி.சி.பிரிவு.151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரரின் மனுவின் சுருக்கம் :</u>–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் பேரில் வழக்கு தாக்கல் செய்து வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக கடந்த 03.02.2024 அன்று வாய்தா போடபட்டிருந்தபோது மனுதாரருக்கு வயிற்று போக்கு ஏற்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்டு மனுதாரரால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியாமல் போய்விட்டது என்றும், மனுதாரர்

தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்தால் மட்டுமே வழக்கின் உண்மைத் தன்மையினை நீதிமன்றத்திற்கு வெளிப்படுத்த முடியும் என்றும், ஆகையால் வாதி தரப்பு சாட்சியை விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்தினை 03.02.2024 முடிக்கப்பட்டதாக போடப்பட்டுள்ள வழக்கினை இரத்து செய்து மீண்டும் Reopen செய்ய உத்திரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் (இதனை 2,3,4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>

அசல் வழக்கில் மனுதாரரே வாதியாக இருக்கும் நிலையில் அவரே அவரை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்றும், மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக கால அவகாசம் வழங்கப்பட்ட போது கூடுதல் சாட்சியை விசாரணை செய்யாததால் வாதி தரப்பு சாட்சி சமூக நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், தற்போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி DW1 ஆக முதல் விசாரணைக்கான அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா உள்ளது நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு தற்போது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் நடைப்பெற்று வருவதால் வழக்கில் வாதி தரப்பில் வேறு யாரையாவது விசாரிக்க வேண்டுமென்றால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிந்த பிறகு முடிவுற்ற வாதி தரப்பு சாட்சியத்தை Re–Open செய்யதான் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், முன்னமே விசாரித்த சாட்சியை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்றால் அந்த சாட்சியத்தை தான் Re–open செய்து Re–Call செய்ய வேண்டும் என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பும் வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் எதிர்மனுதாரர் பேரில் வழக்கு தாக்கல்

செய்து வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக கடந்த 03.02.2024 அன்று வாய்தா போடபட்டிருந்தபோது மனுதாரருக்கு வயிற்று போக்கு ஏற்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் மனுதாரரால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியாமல் போய்விட்டதால் மனுதாரர் தரப்பில் சாட்சியம் விசாரிக்காமல் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், ஆதலால் மனுதாரர் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்தால் மட்டுமே வழக்கின் உண்மைத் தன்மையினை நீதிமன்றத்திற்கு வெளிப்படுத்த முடியும் என்றும், ஆகையால் வாதி தரப்பு சாட்சியை விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்தினை 03.02.2024 முடிக்கப்பட்டதாக போடப்பட்டுள்ள வழக்கினை இரத்து செய்து மீண்டும் Reopen செய்ய உத்திரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தில் அசல் வழக்கில் மனுதாரரே வாதியாக இருக்கும் நிலையில் அவரே அவரை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்றும், மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக கால அவகாசம் வழங்கப்பட்ட போது கூடுதல் சாட்சியை விசாரணை செய்யாததால் வாதி தரப்பு சாட்சி சமூக நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், தற்போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி DW1 ஆக முதல் விசாரணைக்கான அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா உள்ளது நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி இருதரப்பு வாதத்தினை பரிசீலனை செய்து பார்க்கையில் அசல் வழக்கினை மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தொடரப்பட்டு மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டு, அதன் பிறகு எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரை குறுக்குவிசாரணை செய்யப்பட்டு அதன் பிறகு மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியம் அளிக்க நான்கு வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும் மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியம் அளிக்காததால் மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியம் கடந்த 03.02.2024 அன்று முடிக்கப்பட்டு எதிர்மனுதார் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா மாற்றப்பட்டு கடந்த 23.02.2024 அன்று எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாததால் மேற்படி வழக்கானது இருதரப்பு வாதத்திற்காக கடந்த 02.03.2024 அன்று வாய்தாப் போடப்பட்டிருந்தபோது எதிர்மனுதாரர் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியத்தை மறுத்திறப்பு

செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது 25.03.2024 அன்று அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டு, தற்போது வழக்கானது DW1 குறுக்கு விசாரணக்காக வாய்தா உள்ளபோது மனுதாரர் அவரது சாட்சியத்தை மறுத்திறப்பு செய்யகோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும், மனுதாரர் சாட்சியத்தை மறுத்திறப்பு செய்வதற்கான எந்த ஒரு காரணத்தையும் மனுவில் குறிப்பிடவில்லை. மேலும், சாட்சியங்களை யாரையும் மனுவில் பட்டியலிட்டு கூறவில்லை. மேலும், அசல் வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கையில் மனுதாரருக்கு அவரது வழக்கு சங்கதிகளை நிரூபிக்க கூடுதல் சாட்சியங்கள் அளிக்க போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் அவர் சாட்சியங்களை குறித்து எந்தவித எடுத்துரைப்பும் நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் இருந்ததால் அவரது சாட்சியமானது முடிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ளபோது மனுதாரர் வேண்டுமென்றே அவரது தரப்பு சாட்சியத்தை நீதிமன்றத்தில் முன்னிலையப்படுத்தாமல் இருந்துவிட்டு தற்போது வழக்கானது DW1 குறுக்கு விசாரணைக்கு உள்ள தருவாயில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.09.04 17:05:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.09.04 17:05:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.